# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**செய்தி வெளியீடு எண். 11/2024** **நாள் 19.01.2024**

## செய்தி அறிவிப்பு

தேர்வாணையத்தால் அறிவிக்கப்பட்ட உரிமையியல் நீதிபதி பதவிக்கான நேர்முகத் தேர்வு 29.01.2024 முதல் 10.02.2024 வரை (03.02.2024 (ம) 04.02.2024 சனி (மற்றும்) ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) ஆகிய தேதிகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

விண்ணப்பதாரர்கள், தங்கள் இணையவழி விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளவாறு அனைத்து மூலச்சான்றிதழ்களையும் நேரில் கொண்டு வரவேண்டும். நேர்முகத் தேர்விற்கான தேதி, நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்பு குறிப்பாணையினை விண்ணப்பதாரர்கள் தேர்வாணைய இணையதளத்திலிருந்து (www.tnpsc.gov.in.) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வாயிலாகவும் விவரங்கள் தெரிவிக்கப்படும். நேர்முகத் தேர்விற்கென அழைப்பாணை தனியே அனுப்பப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்விற்கு உரிய நாளில் / நேரத்தில் கலந்து கொள்ளத் தவறினால், அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது.

ச.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப.,

செயலாளர்